**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்காக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையை சேர்ந்த உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளுதல்**

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தில் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

| பதவிப் பெயர் | சேவை | தரம் | சம்பள வகுதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| பிரதி/ உதவிப் பணிப்பாளர் | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை | 1 ஆம் வகுப்பின் III/II ஆம் தரம் | SL -1 | 01 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | | 2 ஆம் வகுப்பின் II/I ஆம் தரம் | MN - 6 | 01 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | | 3 ஆம் வகுப்பின் III/II/I ஆம் தரம் | MT 1 | 07 |

குறிப்பு :- தொகுதி அபிவிருத்தி மற்றும்/ அல்லது வலையமைப்பு கட்டுப்பாட்டு நடவடிக்கை சம்பந்தமான அனுபவத்தைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

02. மேற்குறிப்பிட்ட பதவிகளுக்காக இட மாற்றத்தை பெற்றுக் கொள்ள விரும்பும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இருக்குமாயின் உத்தியோகத்தரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், நியமன கடிதத்தின் இலக்கம் மற்றும் செயல்படக்கூடிய தொலைபேசி இலக்கம் உள்ளிட்ட சுய விபர தகவல் படிவம், தொடர்புடைய கல்வி மற்றும் தொழில் தகைமைகளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் மற்றும் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனத் தலைவரின் பரிந்துரைகளுடன் **2023.07.15** ஆம் திகதிக்கு முன்னர் dgitm@itmd.treasury.gov.lk மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் அல்லது பணிப்பாளர் நாயகம், தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம், செயலகம், கொழும்பு 01 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலின் மூலம் அனுப்புமாறு தயவுடன் அறியத் தருகிறேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோக்கபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்